1972 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, குறிப்பிட்ட புகார் பற்றிச் சொல்கிறார்கள். அதுபற்றிய புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. அந்தப் பகுதியில் விறகு, மூங்கில் போன்றவற்றை வெட்டுவதற்குத்தான் ஏலம் விடப் படுகிறது. அதனால் அரசாங்கத்திற்கு 3-4 லட்சம் ரூபாய் லாபம் வருகிறது. சந்தன மரங்கள் மட்டும் தனியாகப் போடப்படுகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Because of such pilferage of sandalwood trees, would the Government stop giving the lease of cutting sandalwood trees to private contractors and will the Government do it by themselves?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, அப்படி உத்தேசம் ஒன்றுமில்லை.

* 326 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சந்தன மரங்கள் அதிகமாக உள்ள ஜவ்வாது மலை அடிவாரத் திலுள்ள ஆலங்காயம் அல்லது ஆண்டியப்பனூரில் சந்தனத் தைலம், சந்தனத் தூள் இவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சந்தன மரங்கள் பாது காக்கப்படவேண்டும். தமிழ்நாட்டில் முதுமலைக்காடுகள் போன்ற இடத்தில் சந்தன மரங்கள் உற்பத்தியாகின்றன. இன்றைக்கு மைசூரில் சந்தனப் பௌடர், சந்தன எண்ணை ஆகியவற்றை உற்பத்தி செய்து பல பகுதிகளுக்கு அனுப்புகிறார்கள். நமது நாட்டில் இப்படி சந்தன மரங்கள் விளைச்சல் இருக்கக்கூடிய நேரத்தில், நாமும் அப்படிச் செய்வது நல்லது அல்லவா? அதற்கு பைலட் ஸ்கீம் போட்டாவது அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 300 டன் எடையுள்ள சந்தனக் கட்டையைக் கொண்டு ஒரு தொழிற் சாலையை அமைக்கலாம் என்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1972 மார்ச் 6

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, மைசூரில் விளைகிற சந்தனக் கட்டைகள், மரங்கள் ஆகியவற்றிற்கு வெளிநாட்டில் நல்ல மார்க்கெட் இருப்பது தெரியும். இப்போது அமைக்க இருக்கின்ற அந்த தொழிற்சாலையை வடஆற்காடு மாவட்டத்திலேயே, வேலூருக்கு அருகாமையிலேயே உள்ள இடங்களில் அமைக்க அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, எந்த இடம் என்பது முக்கியமல்ல. பவானிசாகரில் அமைக்கப் போவதாகக் குறிப்பு இருக்கிறது. முதலில் அமைக்கமுடியுமா என்று பார்க்கவேண்டும். இப்போது இந்தியாவில் தேவைக்கு அதிகமாக உற்பத்தி இருப்பதாகக் கூறுகிறார்கள். ரூ. 1½ கோடி வருமானம் வருகிறது. 16 தொழிற்சாலைகளுக்குப் போதுமான அளவு கட்டைகள் இல்லை என்று தான் சொல்கிறார்கள். அமைக்க முடியுமா என்ற சாத்தியக்கூற்றைப் பார்க்கவேண்டும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 300 டன் சந்தனக் கட்டைகள் கொண்ட தொழிற்சாலை ஒன்றை அமைக்க குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அது தனியார் துறையிலா, அல்லது பொதுத்துறையிலா ஆரம்பிக்கப்பட இருக்கிறது ? எவ்வளவு பணச் செலவில் அத்திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அரசுத் துறையில், சுமார் ரூ. 30 லட்சம் செலவாகும் என்று கருதப் படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : A great majority of sandalwood trees are found in the forests of Denkanikotta and Housr Taluks. In Kuppam town in Chittoor district where sandalwood trees do not grow, they are having a big sandalwood factory and supply oil to many places in the country. May I know whether the Government will think of starting a sandalwood oil factory and sandalwood powder factory at Hosur, considering the large availability of sandalwood trees there ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும். அதற்குப் பிறகு பார்க்கலாம்.

1972 மார்ச் 6]

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, சந்தனப் பவுடருக்கு பெண்கள் மத்தியில் அதிகக் கிராக்கியிருக்கிறது. அதையாவது சீக்கிரம் ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்போதே அதனுடைய உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று கருதப்படுகிறது.

பேருந்து பயணக் கட்டணம்

*327. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் துறை பேருந்துகளுக்கும் நாட்டுடமையாக்கப்பட்ட அரசு பேருந்துகளுக்கும் பிரயாண கட்டண விகிதத்தில் உள்ள வேறுபாடுகளைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 22—6—1971 நாளுக்கு முன்பு, சாதாரணப் பேருந்தின் பயணக் கட்டணம் கிலோமீட்டர் ஒன்றுக்கு 3 காசுக்கு மேற்படாத வகையில் முடிவு செய்யப்பட்டிருந்தது. சில மாவட்டங்களில் உள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களும், தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துத்துறையினரும், கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ காசு வீதம் கட்டணம் வசூலித்து வந்தனர். கட்டண வீதங்கள் ஒரே மாதிரியாக இருப்பதற்காக, 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 43 (1) ( ) பிரிவின் கீழ், உள்துறையின் 22—6—1971 நாளிட்ட 1674-ஆம் எண் அரசு ஆணையில் பயணக் கட்டணம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்று இருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசுக்கும் குறைவாகப் பயணக் கட்டணம் வசூலிக்க தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கிருந்த விருப்ப உரிமை எடுத்துவிடப்படவே, தனியார் பேருந்து உரிமையாளர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையினர் ஆகிய இருவரின் பேருந்துப் பயணக் கட்டணங்கள், 1—10—1971 நாளிலிருந்து கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்ற ஒரே மாதிரியான வீதத்தில் இருக்குமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.